DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.75/2025**
Prosecution Witness P.W.6

Name : **திரு.பால்முருகன்**
Caste:

Father's Name :**திரு.**
Calling :

Village:
Religion :

Taluk :
Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 12.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

நான் கண்டமனூரில் குடியிருந்து வருகிறேன். தோட்டத்து வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எந்த விபரங்களும் எனக்கு தெரியாது. செல்வராஜன் மகன் சஞ்சீவ் குமாரின் பிரேத பரிசோதனையின் பொழுது என்னிடம் போலீசார் கையெழுத்து கேட்டதன் பேரில் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். அந்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கக்கூடிய பார்வை மகஜர் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.3, அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது அ.சா.ஆ.4.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

**அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை**

21.10.2024 ஆம் தேதியன்று காலை 6 மணி அளவில் சம்பவ இடமான தில்லை காளியம்மன் கோயில் அருகில் நின்று கொண்டிருக்கும் பொழுது என் முன்னிலையிலும், மச்சக்காளை மச்சக் காளை மகன் ராஜா என்பவர்

முன்னிலையிலும் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அந்த இடத்தில் இருந்த ரத்தக்கறை படிந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு ஒன்றையும், சணல் சாக்கு ஒன்றையும் நீல நிற வேஷ்டி ஒன்றையும் வெள்ளை நிற ஒரு ஜோடி செருப்பு ஒன்றையும் ரத்தக்கறை படிந்த சுமார் 18 கிலோ எடை கொண்ட கருங்கல் ஒன்றையும், TN 60 AJ 2628 என்ற எண் கொண்ட ஹீரோ ஸ்ப்ளெண்டர் என்ற இருசக்கர வாகனத்தையும் ரத்தம் படிந்த இடத்தில் இருந்து தரை மற்றும் ரத்தம் படியாத இடத்தில் இருந்து சிமெண்ட் துகள்களையும் காலை 6.45 மணிக்கு எங்கள் இருவர் முன்னிலையில் போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், மேற்கண்ட இரண்டு ஆவணங்களிலும் கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டு தற்பொழுது கையெழுத்தை மட்டும் ஒப்புக்கொண்டு மற்ற அனைத்து ஆவணங்களையும் எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.12 17:18:43 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.